மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து: (அ) & (இ) மாநிலங்களில் வேளாண்மை வளர்ச்சிக் கழகங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஒன்று இந்திய அரசின் கருத்தில் இருந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்தகைய கழகம் ஒன்றை அமைக்குமாறு மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது. ஆனால் இந்திய அரசு இத்திட்டத்தையே பின்னர் கைவிட்டு விட்டதால் இது செயல்படுத்தப்படவில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: இந்த வேளாண்மைக் கழகத்தின் நோக்கங்கள் என்ன? இதனால் விவசாயப் பெருமக்கள் என்ன நன்மை பெறுவார்கள் என்பதை விளக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆரம்பத்தில் உருவாக இருந்த விவசாய வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம் கிணறுகள் வெட்டுதல், நிலங்களைப் பண்படுத்தல், கருவிகளையும், தேவையான பொருள்களையும் வாங்கிக்கொள்வதற்குப் பயிரிடுகிறவர்களுக்கு நடுத்தரக்காலக் கடன் வழங்கல், மற்றும் வாணிப முறையில் உரங்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலியவற்றை நிறுவனங்களின் கீழ் வழங்குதல்.

இதைத்தவிர துளைக் கிணறுகள் எடுக்க உதவுதல், விவசாயப்பொருள்களை விற்பனை செய்ய உதவுதல் போன்ற வேளாண்மை வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்துதல். அமெரிக்க உதவியுடன் மாநிலங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்தில் இத்தகைய வளர்ச்சிக் கழகங்களை ஏற்படுத்த மத்திய சர்க்காரின் செயற்குறிப்பு ஒன்று இருந்தது. அதை அவர்கள் இப்போது கைவிட்டு சிறு உழவர் திட்டம் என்று ஒன்றை ஏற்படுத்த முன்வந்துள்ளனர். அதைத் தென்னாற்காடு மாவட்டத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கம் 2 மாவட்டங்களுக்கு சிறு உழவர் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: விவசாய அபிவிருத்திக் கார்ப்பரேஷனுடைய நோக்கங்களைப் பற்றிக் கூறினார்கள். இவற்றையே அரசாங்க இலாக்கா செய்து கொண்டிருக்கிறதே, தனியாக இப்படிப்பட்ட ஒரு கழகம் அமைத்துச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? மேலும் அப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்படுகிறது என்கிறபோது தஞ்சை மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்வானேன் மாநிலம் முழுவதற்கும் அதை ஏன் விஸ்தரிக்கக் கூடாது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது இந்திய அரசாங்கம் அமெரிக்காவிடம் இருந்து உதவி பெற்றுத் தருகிற ஒன்றாகும். நம் மாநிலத்திலேயே இப்படிப்பட்ட காரியங்கள் இலாக்கா மூலமாக நடைபெறுகின்றன என்றாலும் அமெரிக்கா கொடுக்கிற உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் இது அமைக்கப்படுகிறது. இந்திய சர்க்கார் மாநிலத்திற்கு ஒரு மாவட்டம் தான் என்றார்கள். அந்த அடிப்படையில் தஞ்சைமாவட்டம் எடுக்கப்பட்டது.

Supply of oil engines, etc. to agriculturists

*438 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Agro-Industries Corporation has decided to supply the needy agriculturists with oil engines and pumpsets direct; and

(b) if so, from which date?

1970 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம்: அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் தாங்களே நேரிடையாக விவசாயிகளுக்குப் பம்பு செட்டு முதலியவைகளைத் தருகிறோம், அனுமதி தாருங்கள் என்று கேட்டார்களா? அப்படிக் கேட்டிருந்தால் அனுமதி கொடுப்பதற்கு என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகளும் கூட அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக நேரிடையாகத் தருவதில்லை. ப்ளாக் டெவலெப்மெண்ட் அதிகாரிகள் மூலம் தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்று என்ன என்ன கொடுக்கப்படவேண்டும், விலை என்ன என்பது எல்லாம் பெற்று திரும்ப விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இதில் காலதாமதம் ஏற்படுகிறது. விரைவில் உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காக நேரில் அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனே கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் பரிட்சார்த்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நல்ல முறையில் செயல்படுகிறது என்றால் இதைப் பற்றி போர்ட் ஆப் டைரெக்டர்ஸ் ஒரு முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அடுத்து விதி 41-ன் கீழ் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

2. கவன ஈர்ப்பு

(அ) தமிழ்நாட்டை சேர்ந்த சில இடங்களை ஆந்திர மாநிலத்தோடு சேர்க்க ஆந்திர மாநில அரசு கமிஷன் நியமிப்பதாகச் சொல்லப்படுவது குறித்து முற்பகல் 10-00

திரு. ஏ. அ. சுப்பராஜா: சட்டப்பேரவை விதி 41-ன்கீழ் ஆந்திர சட்டசபையில் தனது மாநில எல்லை ஓரங்களில் ஒட்டியுள்ள அண்டை மாநிலப் பிரதேசங்களைச் சேர்த்துக்கொள்ளுவதுபற்றி நடவடிக்கையெடுக்க ஒரு கமிஷனை நியமித்ததோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹோசூர், கிருஷ்ணகிரி, வெப்பனபள்ளி ஆகிய இடங்களில் தெலுங்கு பேசுபவர்கள் பெரும்பான்மை என்பதைச் சுட்டிக்காட்டி அவைகளை ஆந்திர மாநிலத்தோடு சேர்க்கவேண்டுமென்று உரிமையை நிலைநாட்டுகின்ற நேரத்தில் நமது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப்பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலச் சட்டப் பேரவையால்—அண்டை மாநிலப் பிரதேசங்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதற்காக—கமிஷன் எதுவும் நியமிக்கப்பட்டிருப்பதாக இந்த அரசுக்குத் தெரியவரவில்லை. 1959-ம் ஆண்டு ஆந்திர மாநிலம்—தமிழ்நாடு (எல்லை மாற்றச்) சட்டத்தினையொட்டி இம்மாநிலத்திற்கும், ஆந்திர